**IN THE COURT OF THE I-st ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**

**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.20/2020 - PW-2**

| | |
|---|---|
| Name | திரு.ராஜேந்திரன் |
| Father Name | மாணிக்கம் |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | |
| Age | |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 03.12.2024.

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் ஆற்காடு வட்டம், முப்பதுவெட்டி, கனியனூர் சாலையில் வசிக்கிறேன். நான் முத்துக்கடையில் லாரி மெக்கானிக் கடை வைத்துள்ளேன். வழக்கில் இறந்த நடராஜனை தெரியும். நடராஜன் மகன்தான் அ.சா.1 ஆவார். ஆஜர் எதிரிகள் 7 பேரையும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் 7 பேரும் எங்கள் ஊரைச் சார்ந்தவர்கள். 02.03.2014 தேதி நான் வீட்டில் இருந்து என் மச்சானை கிருஷ்ணா பஸ்ஸில் ஏற்றிவிட்டு, மதியம் 2.45, 3.00 மணியளவில் வீட்டிற்கு திரும்பி வந்துகொண்டிருந்தேன். கனியனூர் சாலையில் டர்னிங்கில் நான் வந்த போது சுமார் 100 பேர் கூட்டமாக இருந்தார்கள். நான் செல்வதற்கு வழியில்லாததால், அங்கேயே நின்றேன். அப்போது என்னை யாரோ அடித்துவிட்டார்கள். என்னை அடித்தவுடன் மயக்கம் வந்துவிட்டது. என்னை அடித்தது யார் என்று தெரியாது. இன்று வரை என்னை யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. நடராஜனை யார் அடித்தார்கள்

என்று எனக்கு தெரியாது. என்னை ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பிறகு, மேல்சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துமனையில் நான் இருந்த போது போலீசார் என்னை விசாரித்தார்கள். வேலூர், நீதித்துறை நடுவர் 3 நீதிமன்றத்தில் நான் வாக்குமுலம் அளித்தேன். கு.வி.மு.ச பிரிவு 164ன் கீழ் நான் அளித்த வாக்குமூலம் தான் **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி, அனுமதி வழங்கப்படுகிறது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –**

ஆய்வாளர் என்னை விசாரித்த போது, 02.03.2014 தேதி எங்கள் ஊரில் இருக்கும் பள்ளியில் தமிழக அரசு வழங்கும் விலையில்லா பொருட்களை வழங்கிகொண்டிருந்ததாகவும், அந்த இடத்திற்கு எங்கள் ஊரைச்சேர்ந்த மணிகண்டன் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு நடந்து வந்த போது, பெரிய காலனியை சேர்ந்த சிலம்பரசன் அவனது மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்து மணிகண்டன் மீது உரசிய படி போனதாகவும், அதை மணிகண்டன் கேட்டதற்கு அப்படித்தான் செய்வேன், மோதுவேன், அடிப்பேன் என்று அசிங்கமாக மணிகண்டனை சிலம்பரசனை திட்டியதாக ஊரில் வந்து மணிகண்டன் சொன்னதாகவும், நான் என்னுடைய நண்பர் நடராஜன் அவருடைய மகன் கோபிநாத், ஊர்க்காரர்கள் சேர்ந்து மேலும் பிரச்சனை நடக்காமல் இருக்க முப்பதுவெட்டி சந்திப்பில் பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது அந்த இடத்தில் பகல் 2 மணியளவில் ஊர்க்காரர்களை வைத்தியர்வீதியை சேர்ந்த செல்வம் மகன்கள் பாஸ்கர், கண்ணன் என்கிற செந்தாமரை, பெரிய காலணியை சேர்ந்த சிலம்பரசன்,

பிரேம்குமார், சரத் என்கிற சரத்குமார், சித்திஷ்வரா பாலிடெக்னிக் கல்லூரியில் படிக்கும் விக்னேஷ் ஆகிய 7 நபர்கள் வழிமடக்கி எங்களை என்னடா Metting போட்டு இருக்கிறிர்கள் என்று எங்களை அசிங்கமா திட்டியும், பாஸ்கரன், சிலம்பரசனும் என்னையும், நடராஜனையும் பார்த்து நீங்கள் இருந்தால்தானே பிரச்சனை இதோடு ஒழிந்துபோடா என்று எங்கள் இருவரின் தலையில் இரும்பு ராடால் ஓங்கி அடித்தார்கள் என்றும், அதே நேரத்தில் கண்ணனும், பிரேம்குமாரும் கையில் வைத்திருந்த முள்வேலி கொம்பால் நடராஜனை கண்ணன் முதுகு மீதும், தலையின் மீதும் அடித்தார் என்றும், பிரேம் குமார் என் தலை மீதும், முதுகு மீதும் அடித்தார் என்றும், சரத்குமார் நடராஜனின் வயிற்று மீது அடித்தார் என்றும், விக்னேஷ் நடராஜனை கையால் முகத்திலும், முதுகிலும்அடித்தார் என்றும், கபிலன் என்னை கையால் வயிற்று மீது குத்தினார் என்றும், இந்த சண்டையை கோபிநாத், விஜயக்குமார், ரஞ்சித்குமார் நேரில் பார்த்து விலக்கிவிட்டார்கள் என்றும், எங்கள் ஊருக்கு தகவல் தெரிந்து ஊர்க்காரர்கள் ஓடி வருவதை பார்த்து, எங்களை தாக்கிய 7 எதிரிகளும் ஓடிவிட்டார்கள் என்றும், காயம் அடைந்த என்னை, நடராஜனை கோபிநாத் இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு அழைத்துவந்தார் என்றும், சொன்னேன் என்றால், சரியல்ல. எதிரிகளுக்கு ஆதரவாக தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில் –**

மணிகண்டனும், சிலம்பரசனும் சண்டை போட்டதை நான் நேரிடையாக பார்க்கவில்லை என்றால், சரிதான். 100 பேர் கூடி பஞ்சாயத்து பேசியதுதான் எனக்கு தெரியும். வேலூர், நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றத்தில் நான் முதல் விசாரணையில் சொன்னது போல்தான்

வாக்குமூலம் கொடுத்தேன். நான் என்னை தாக்கியது குறித்து புகார் எதுவும் கொடுக்கவில்லை. எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், ஊர்க்காரர்கள் கேட்டதால், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

**S/d. M.Selvam,**
**I Additional District Judge,**
**Ranipet.**